ஆண்டு பட்டிகை வழக்கு எண்.54/2025

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 54/2025 LW- 4 PW- 4

| | |
|---|---|
| Name | : ஜெரால்டுராஜா ( ஒப்புதல் வாக்குமூல சாட்சி) |
| Father's/Husband's Name | : தேவசகாயம் |
| Village | : தலைமைக் காவலர் |
| Taluk | : நத்தம் காவல் நிலையம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 38/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of February 2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

2. நான் தற்போது நத்தம் காவல்நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.09.2024ம் தேதி நத்தம் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்த பொழுது காலை 7.30 மணிக்கு நானும், தலைமைக் காவலர் 739 அழகுராஜ் என்பவரும் நிலைய அலுவலில் இருந்தபோது சார்பு ஆய்வாளர் திரு.கிருஷ்ணகுமார் அவர்கள் நத்தம் காவல் நிலைய குற்ற எண்.499/2024 என்ற வழக்கின் சட்டப்பிரிவு 4(1-A) TNP Act என்ற வழக்கின் எதிரியை தேடிய நிலையில் சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் பரளி தேத்தாம்பட்டிக்கு நானும், அழகு ராஜ் என்பவரும் சார்பு ஆய்வாளருடன் சென்றோம். மேற்படி வழக்கின் எதிரி அசோக் வயது(30/2024) த/பெ. வில்லி என்பவரை அவரது வீட்டின் அருகே இருந்தபோது சார்பு ஆய்வாளர் காரணம் கூறி கைது செய்து அவரது உறவினர்களிடம் தகவல் தெரிவிக்கப்பட்டது. பின்னர் எதிரியிடம் எந்தவித

வற்புறுத்தலோ, துன்புறுத்தலோ இன்றி எதிரி தானாக வந்து கொடுத்த வாக்குமூலத்தை சார்பு ஆய்வாளர் எங்கள் இருவரது முன்னிலையிலும் பதிவு செய்தார். பின்னர் அந்த வாக்குமூலத்தில் நானும், அழகுராஜ் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2வது சாட்சிக் கையொப்பம் என்னுடையது. ( **ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2வது சாட்சிக் கையொப்பம் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

3) எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் எந்த தேதியில், எந்த நேரத்தில், எந்த இடத்தில் வைத்து பெறப்பட்டது என்றால் 12.09.2024ஆம் தேதி காலை 8.30 மணி அளவில் தேத்தாம்பட்டி பரளியில் வைத்து பதிவு செய்யப்பட்டது. எந்த வழக்கு தொடர்பாக வாக்குமூலம் பெறப்பட்டது என்றால் 09.09.2024–ஆம் தேதி பதிவு செய்யப்பட்ட தமிழ்நாடு மதுவிலக்கு தடை சட்டம் கீழான வழக்கிற்கு ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. நான் சார்பு ஆய்வாளரின் கீழ் பணி புரிவதால் அவர் சொல்லும் வேலைகளை செய்ய வேண்டியது எனது கடமை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அந்த தேதியில் வழக்குப் பொருட்கள் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட சமயம் எதிரி தான் படித்துக் கொண்டிருப்பதாக சொன்னாரா அல்லது வேலை பார்ப்பதாக சொன்னாரா என்றால் மதுரையில் வேலை பார்ப்பதாக சொன்னார். எதற்காக ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கிறார் என்றும் என்னென்ன பொருட்கள் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்பது குறித்தும் எதிரி சொன்னாரா என்றால் அது பற்றி ஞாபகம் இல்லை.

4) எந்த ஊருக்கு சென்று வந்ததாக எதிரி சொன்னார் என்றால் மதுரைக்கு சென்று வந்ததாக சொன்னார். காவல் நிலையத்திலிருந்து பொய்யாக போடப்பட்ட வழக்கு என்றாலும் என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்பதால் தான் எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில்

**சொன்ன விபரங்களை என்னால் சொல்ல இயலவில்லை என்றாலும் சரியல்ல. உண்மையில் எதிரிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டிருந்தால் அது பற்றிய விபரங்களை தெரிவித்து இருப்பேன் என்றாலும் சார்பு ஆய்வாளர் கொடுத்த வெள்ளை பேப்பரில் கையொப்பம் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் கைப்பட எழுதப்படாமல் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு எடுக்கப்பட்டுள்ளது என்பதால் நான் சொல்லும் விபரங்கள் தவறானது என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum
Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.25 16:58:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 54/2025 LW- 6 PW- 5

| | |
|---|---|
| Name | : ஜோதி லெட்சுமி ( Formal witness) |
| Father's/Husband's Name | : முத்துக்குமார் |
| Village | : முதல்நிலைக் காவலர் |
| Taluk | : தாடிக்கொம்பு காவல் நிலையம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 37/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of February 2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

2. நான் தற்போது தாடிக்கொம்பு காவல்நிலையத்தில் முதல்நிலைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.12.2024ம் தேதி நான் நத்தம் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்த பொழுது சார்பு ஆய்வாளர் திரு.கிருஷ்ணகுமார் அவர்களின் உத்தரவின்பேரில் நத்தம் காவல் நிலைய குற்ற எண்.499/2024 என்ற வழக்கின் சட்டப்பிரிவு 4(1-A) TNP Act என்ற வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களிடமிருந்து கடிதம் பெற்று மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து ஒப்புதல் பெற்றேன். மேற்படி ஒப்புதல் எண். MDU/PRO.No./75/2024 ஆக பெற்று நிலையம் வந்து ஒப்படைத்து அறிக்கை செய்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

3) மதுரை தடயஅறிவியல் ஆய்வகத்திற்கு எந்த தேதியில், எத்தனை மணிக்கு நீதிமன்றத்திலிருந்து சான்று பொருளை எடுத்து சென்று ஒப்படைத்தேன் என்றால் 16.12.2024ம் தேதி காலை 11.00 மணிக்கு நீதிமன்றத்திலிருந்து கிளம்பி சென்றேன். எந்த தேதியில், எத்தனை மணிக்கு நீதிமன்றத்தில் கடவுச் சீட்டை ஒப்படைத்தேன் என்றால் அன்றையதினமே ஒப்படைத்தேன். நேரம் ஞாபகமில்லை. இந்த விபரங்களை சார்பு ஆய்வாளர் விசாரணையில் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். சார்பு ஆய்வாளரிடம் மேற்படி விபரங்களை தெரிவிக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன்என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.25 16:58:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்